<u>நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>

<u>முன்னிலை</u> :- திரு.அப்துல் ரகுமான், **B.Com., L.L.B.,**
நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்

2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் செவ்வாய் கிழமை,

திருவள்ளுவராண்டு, 2055, குரோதி வருடம், மாசி திங்கள்
27 ம் நாள் செவ்வாய்கிழமை

<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.1236/2020</u>
**<u>CNR NO.:TNCB0A-005576-2020</u>**

<u>அரசுக்காக:-</u>

காவல் ஆய்வாளர்,

கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம்,

கோயமுத்தூர்.

(காவல் நிலைய குற்ற எண்.(16/2019). ... புகார்தாரர்

/எதிர்/

**A**1. உமாசங்கர் (37/2020),
த/பெ.சிவசாமி,
கதவு எண்.3, 3 வது தெரு,
சக்திநகர், சவுரிபாளையம்,
கோயமுத்தூர்.

2. சாந்தாமணி (54/2020),
க.பெ.சிவசாமி,
கதவு எண்.3, 3 வது தெரு,
சக்திநகர், சவுரிபாளையம்,
கோயமுத்தூர்.

3. பிரகாஷ் (39/2020),
த.பெ.சிவசாமி,
கதவு எண்.3, 3 வது தெரு,
சக்திநகர், சவுரிபாளையம்,
கோயமுத்தூர். ... எதிரிகள்

| குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106-ன் படியான விவரப்பட்டியல் | | |
|---|---|---|
| 1. | வரிசை எண் | **C**.**C**.**No**.1236 **of** 2020 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், கோவை, குற்ற எண்.16 **of** 2019 |
| 3. | எதிரியின் பெயர் | **A**1. உமாசங்கர்,<br>த/பெ.சிவசாமி,<br>கதவு எண்.3, 3 வது தெரு,<br>சக்திநகர், சவுரிபாளையம்,<br>கோயமுத்தூர்.<br>2. சாந்தாமணி,<br>க.பெ.சிவசாமி,<br>கதவு எண்.3, 3 வது தெரு,<br>சக்திநகர், சவுரிபாளையம்,<br>கோயமுத்தூர்.<br>3. பிரகாஷ்,<br>த.பெ.சிவசாமி,<br>கதவு எண்.3, 3 வது தெரு,<br>சக்திநகர், சவுரிபாளையம்,<br>கோயமுத்தூர்.<br>***** எதிரிகளின் வயது : 1. 37/2020<br>2. 54/2020 3. 39/2020<br>*****எதிரிகளின் தொழில்:<br>1-ம் எதிரி - வியாபாரம்,<br>2-ம் எதிரி - -<br>3 ம் எதிரி - மார்கெட்டிங் |
| 4. | தந்தையாரின் பெயர் | |
| 5 | தொழில் | |
| 6 | குடியிருப்பு | |
| 7 | வயது | |
| 8 | சம்பவம் நடந்த தேதி | 10.02.2019 |
| 9 | முறையீடு செய்யப்பட்ட தேதி | 09.10.2019 |
| 10 | கைது செய்யப்பட்ட தேதி | - |
| 11 | பிணையில் விடுவித்தல் | - |
| 12 | ஒப்படைத்தல் /அனுப்பிவைத்தல்-ன் தேதி | இல்லை |

| | | |
|---|---|---|
| 13 | விசாரணை துவங்கப்பட்ட தேதி | 20.12.2022 |
| 14 | விசாரணை முடிவடைந்த தேதி | 04.03.2025 |
| 15 | தண்டனை அல்லது உத்தரவு | இ.த.ச. பிரிவுகள் 323, 406, 498(**A**), 506(1) ன் படி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டு கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்-படுகின்றது. |
| 16 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / முடிவு | எதிரிகளுக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்படவில்லை. |
| 17 | காலதாமதத்தின் விளக்கம் | - |

**As per Rule 106 CRP 2019**

Case Summary in CC 1236/2020

| Sl.No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused/Surrender | - |
| 2. | Date of filing of the Complaint/Final Report in the Court | 23.07.2020 |
| 3. | The date of Commital of the case to the court of session | Not applicable |
| 4. | First Questioning U/S.240 Cr.P.C | 05.12.2020 |
| 5. | Filing of Miscellaneous petition and result 311 Cr.P.C Petition | CMP No.2229/2025 |
| 6. | Date of Examination in chief and Cross examination of witness.<br><br>PW1 Chief and Cross<br>PW2 Chief and Cross<br>PW3 Chief and Cross<br>PW4 Chief and Cross<br>PW5 Chief and Cross<br>PW6 Chief and Cross<br>PW7 Chief and Cross<br>PW8 Chief and Cross<br>PW9 Chief and Cross<br>PW10 Cheif and Cross | (see witness table below) |

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 20.12.2022 | 04.03.2025 |
| PW2 | 20.12.2022 | |
| PW3 | 20.12.2022 | |
| PW4 | 20.12.2022 | |
| PW5 | 20.01.2023 | |
| PW6 | 20.01.2023 | |
| PW7 | 20.01.2023 | |
| PW8 | 20.01.2023 | |

| | | |
|---|---|---|
| | | PW9 27.02.2023 03.08.2023<br>PW10 03.05.2023 14.08.2023 |
| 7. | NBW Issued date | 16.11.2023 |
| 8. | NBW recalled | 04.03.2025 |
| 9. | Questioning U/s.313(i)(b) of Cr.P.C | 12.05.2023 |
| 10. | Datails of Abscondence of an accused and his appearance/producion | Nil |
| 11. | Grant of stay by superior courts and the result there of | Nil |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 23.07.2020 ம் தேதி அன்று இந்நீதிமன்றக் வழக்குக்கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியாக 11.03.2025 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-**II** அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.**S**.ராஜ்குமார், பி.ஏ., பி.எல்., அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் 23.07.2020 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் இ.த.ச. பிரிவுகள் 323, 406, 498(**A**), 506(1)-ன் கீழான குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்-கொள்ளப்பட்ட வழக்காகும்.

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரருக்கும் 1 ம் எதிரிக்கும் கடந்த 10.02.2019 ம் தேதியன்று பீளமேட்டில் உள்ள **Hope College** அருகில் உள்ள **CLUSTER MEDIA ZONE**-ல் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடந்துள்ளது. திருமணத்திற்காக நிகழ்நிலை புகார்தாரரின் குடும்பத்தினர்கள் 30 பவுன் நகை, **Two Wheeler** (**Scooty**), **LG Washing Machine**, **LG**

**Refregerator**, **Mixie** (**Preethi**), **ULRA Wet Grinder**, பீரோ, கட்டில், மெத்தை, பாத்திரங்கள் மற்றும் துணிகளும் கொடுத்து 12 லட்சத்துக்கும் மேலாக செலவு செய்து திருமணம் நடத்தி வைத்துள்ளார்கள். திருமணமான 1 மாதத்திற்குள் நிகழ்நிலை புகார்தாரரின் 30 பவுன் நகைகளில் 15 பவுன் நகையை 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து விற்றுள்ளனர். வீடு கட்ட இடம் வாங்க வேண்டும் அதற்கு அட்வான்சாக ரூ.2 லட்சம் தரவேண்டும் என்று கேட்டு நிகழ்நிலை புகார்தாரரிடம் ''உனது வீட்டில் வாங்கி வா, எங்களுக்கு எங்கள் தொழில் மூலம் ரூ.1.5 கோடி பணம் வரும், அந்த பணம் வந்தவுடன் உங்கள் வீட்டில் திருப்பி கொடுத்துவிடுகிறோம்'' என்று நிகழ்நிலை புகார்தாரரிடம் எதிரிகள் மூவரும் கேட்டதால் நிகழ்நிலை புகார்தாரர் அதை நம்பி அவரது குடும்பத்தினரிடமிருந்து ரூ.2 லட்சம் வாங்கி எதிரிகளுக்கு கொடுத்துள்ளார். சௌரிபாளையத்தில் குடியிருக்கும் வாடகை வீட்டை காலி செய்ய வேண்டும் என எதிரிகள் குடியிருந்த வீட்டின் ஓனர் சொன்னதால் எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரிடம் ''வீட்டை உடனடியாக காலி செய்துவிட்டு **LEASE**-க்கு செல்ல வேண்டும், எங்களால் வாடகை கொடுத்து இருக்க முடியாது, ஆகையால் நீ உங்கள் வீட்டார் இடத்தில் ரூ.5 லட்சமும், உன்னிடத்தில் மீதம் உள்ள 15 பவுன் நகையும் கொடுத்தால் இந்த வீட்டில் எங்களுடன் வாழலாம்'' என்று கூறியுள்ளார்கள். அதற்கு நிகழ்நிலை புகார்தாரர் ''என்னுடைய திருமணத்திற்காக என் வீட்டார்கள் ஒன்று சேர்ந்து 30 பவுன் நகை போட்டார்கள், ஏற்கனவே ரூ.2 லட்சம் வாங்கி கொடுத்து உள்ளேன். இனி எங்களிடத்தில் ஒன்றுமில்லை'' என்று கூறியதற்கு ''தற்போது நீ கர்ப்பமாக உள்ளாய், நீ வாழனும் என்றால் நாங்கள் சொல்வதை கேட்கணும்'' என்று சொல்லி எதிரிகள் மூவரும் நிகழ்நிலை புகார்தாரரை அடித்தும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், மிதித்தும் சாப்பாடு கொடுக்காமல் துன்புறுத்தியுள்ளனர். மேலும் எதிரிகள் மூவரும் நிகழ்நிலை புகார்தாரரிடம் ''நீ வரதட்சணையாக பணம் ரூ.5 லட்சம் வாங்கி வராவிட்டால் உன்னை அடித்து தொங்விடுவோம். இல்லையென்றால் சாப்பாட்டில் விஷம் வைத்து கொன்றுவிட்டு உங்கள் மகள் தற்கொலை செய்துவிட்டாள் என்று கூறிவிடுவோம், எங்களை தட்டி கேட்பதற்கு எங்கள் உறவினர் யாருக்கும் தைரியம் இல்லை, ஒரு வேளை எங்களை போலீஸ் கைது செய்து போனாலும் கவலை இல்லை, எங்களுக்கு பணம் ரூ.1 1/2 கோடி வரவுள்ளது, நாங்கள் ஜாமீனில் உடனே வெளியே வந்துவிடுவோம், உனக்கு உயிர்மேல் ஆசை இருந்தால் நாங்கள் சொல்வதை கேட்கனும்'' என்று மிரட்டி நிகழ்நிலை புகார்தாரரை அடித்து துன்புறுத்தி நிகழ்நிலை புகார்தாரருகக்கு உடலாலும், மனதாலும் பாதிப்படைய செய்துள்ளனர். 13.07.2019

அன்று இரவு முழுவதும் எதிரிகள் மூவரும் நிகழ்நிலை புகார்தாரரை அடித்து துன்புறுத்தியதன் காரணமாக நிகழ்நிலை புகார்தாரர் மயக்கம் அடைந்துள்ளார். அதை தெரிந்த நிகழ்நிலை புகார்தாரரின் சகோதரிகள் 2ம் எதிரியிடம் கேட்டதற்கு அவர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அடித்து நிகழ்நிலை புகார்தாரரை உடலளவிலும், மனதளவிலும் கொடுமைப்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 323, 406, 498(**A**), 506(**i**)ன் கீழ் குற்ற எண்.16/2019 எண்ணில் 09.10.2019ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 323, 406, 498(**A**), 506(**i**)ன் கீழ் கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல்நிலைய ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை 23.07.2020ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றுள்ளனர்.

3. இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1236/2020 என கு.வி.மு.ச. பிரிவு 190(1)(ஆ)ன் கீழ் 23.07.2020ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன் இந்த வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207 பிரிவின் படி 09.11.2020ம் தேதி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால், 05.12.2020ம் தேதியன்று எதிரிகளிடம் இ.த.ச. பிரிவுகள் 323, 406, 498(**A**), 506(**i**)ன் கீழ் கேள்வி கேட்கப்பட்டும், இ.த.ச. பிரிவுகள் 323, 406, 498(**A**), 506(**i**)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போதும், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :

(**I**) அ.சா.1 மேகலா தனது சாட்சியத்தில் கடந்த 10.02.2019 ம் தேதி தனக்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. தனக்கு திருமணத்தின் போது 30 பவுன் நகை, பீரோ, கட்டில், பாத்திரங்கள் மற்றும் ஸ்கூட்டி இரு சக்கர வாகனமும் கொடுத்தார்கள். தனக்கு திருமணத்தின் போது போடப்பட்ட நகைகளில் 15 பவுன் நகைகளை எதிரிகள் நிலம் வாங்குவதாகச்சொல்லி வாங்கிக்கொண்டார்கள். நகைகளை திருப்பித்தரவில்லை. மீதமுள்ள 15 பவுன் நகைகள் எதிரிகளின் வீட்டில் தான் உள்ளது. இரு சக்கர வாகனத்தின் அசல் ஆர்சி புக் மற்றும் வாகனம் எதிரிகளிடம் தான் உள்ளது. தான் எந்த வேலை செய்தாலும் தன்னை திட்டிக் அடித்து துன்புறுத்தினார்கள். இடம் வாங்குவதற்கு அட்வான்ஸ் கொடுக்க வேண்டும் என்றும், அந்த பணத்தை தன் பெற்றோரிடம் வாங்கி வருமாறும் தன்னை கொடுமைப்படுத்தினார்கள். பணம் வாங்கி வரவில்லை என்றால் இங்கு வாழ முடியாது என்று மிரட்டியதால் தானும் 1 ம் எதிரியும் சேர்ந்து தனது வீட்டிலிருந்து ரூ.2 லட்சம் பணம் வாங்கி கொடுத்தோம். 1 ம் எதிரி அக்குபஞ்சர் சிகிச்சை செய்யும் வேலை செய்து வருகிறார். எனவே பணம் தரவில்லை என்றால் தன்னைக்கொன்று விடுவதாகவும், சாப்பாட்டில் விஷம் வைத்தோ அக்குபஞ்சர் மூலமாக வேறு யாருக்கும் தெரியாமல் கொன்று விடுவதாகவும் யாராலும் கண்டுபிடிக்க இயலாது என்றும் கூறிவிட்டார். 13.07.2019 ம் தேதி தன்னை மிகவும் அடித்து துன்புறுத்தியதால் தன் சகோதரிகள் வந்து தனது மாமியாரிடம் கேட்ட போது தன் சகோதரியையும் தன் மாமியார் அடித்ததால் தாங்கள் கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்ற போது மருத்துவமனையில் மெமோ வாங்கி வரச்சொன்னதால் நாங்கள் பீளமேடு காவல் நிலையம் சென்றோம். அங்கு எதிரிகளை அழைத்துசேர்ந்த வாழச்சொல்லி எச்சரித்தார்கள். அப்போது ஆடி மாதம் முடிந்தவுடன் வீடு காலி செய்துவிட்டு தனிக்குடித்தனம் வைத்து அழைத்துச்செல்வதாகக்கூறிச்சென்றார்கள். அதற்கு பிறகு தன்னை அழைத்துச்-செல்லாததால் தான் மீண்டும் மகளிர் காவல் நிலையம் வந்து எதிரிகள் மீது புகார் கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான் என்றும், போலீசார் தன்னை விசாரித்தாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(**ii**) அ.சா.2 சிவகாமி தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் முத்தண்ணக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். அசா1 என் சகோதரி. 2019 ம்

ஆண்டு அசா1 க்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. அவர்களுக்குள் குடும்ப பிரச்சனை இருந்தது. 2 ம் எதிரி என்ன மயிறு பிள்ளை வளர்த்திருக்கிறீர்கள் என்றும், திண்டுக்கல்லில் இப்படித்தான் வளர்ப்பீர்களா என்றும் சூடு போட்டுவிடுவேன் என்றும் கொலை செய்துவிடுவேன் என்றும் சொன்னார். அதன் பிறகு அ.சா.1 ஐ அடித்துப்போட்டுவிட்டு அவரை அழைத்துச்செல்லுமாறு கூறினார்கள். அதன்பிறகு அவரை அழைத்துச்சென்று 1 மாதம் வைத்து நல்ல முறையில் அனுப்பிவிடலாம் என்ற எண்ணத்தில் அசா1 ஐ எங்கள் வீட்டிற்கு அழைத்துச்செல்ல தன் தங்கையுடன் எதிரிகளின் வீட்டிற்கு நேரில் வந்து என்ன பிரச்சனை என்று கேட்டேன். தற்போது பணப்பிரச்சனை உள்ளதாகவும் உதவி செய்யுமாறும் கேட்டார்கள். அப்போது ரூ.40,000/-ம் கொடுத்தேன். மதுரையிலிருந்து வரும் போது அ.சா.1 ஐ வீட்டிற்கு அழைத்துச்சென்றுவிட்டார். அதற்கு பிறகு அ.சா.1 ன் மாமியார் தன் தங்கையின் தலை முடியைப்பிடித்து இழுத்து அடித்துவிட்டதால் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்ற போது அவர்கள் காவல் நிலையத்தில் இருந்து மெமோ வாங்கி வரும்படி சொன்னார்கள். காவல் நிலையம் சென்ற போது அந்த காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முடியாது என்று சொன்னதால் பிறகு கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(**iii**) அ.சா.3 அகிலா தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 தன் சகோதரி. 1 ம் எதிரி அ.சா.1 ன் கணவர். 10.02.2019 ம் தேதியன்று அ.சா.1 க்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு போடப்பட்ட நகைகளில் 15 பவுன் நகை மற்றும் ரூபாய் இரண்டு லட்சம் பணத்தை எதிரிகள் வாங்கி கொண்டார்கள். எதிரிகள் 3 பேரும் என் தங்கையிடம் பணம் கேட்டு பிரச்சனை செய்தார்கள். அடிக்கொரு முறை பணம் வாங்கி வரச்சொல்லி அடித்து அ.சா.1 மயக்கம் போட்டுள்ளார். 2 ம் எதிரி என் தங்கையை அடித்துக்கொல்லுடா எதற்கு இவளை வீட்டில் வைத்திருக்கிறாய் என்று சொன்னார். அ.சா.1 சாப்பிடப்போகும் போது தொண்டு முண்டைக்கு எதற்கு சோறு என்று அசிங்கமாகப்பேசினார். எதிரிகள் 10 நாட்கள் அ.சா.1 ஐ கூட்டி செல்லுமாறு சொல்லிவிட்டார்கள். நாங்களும் அ.சா.1 ஐ அழைத்துச்சென்றுவிட்டோம். தாங்கள் 1 ம் எதிரியிடம் கேட்டதற்கு இன்னும் சிறிது நாள் அங்கேயே இருக்கட்டும் என்று

சொல்லிவிட்டார். தன் தங்கை கருவுற்றிருந்த போது ஆடி மாதத்திற்கு முன்பாக என் தங்கையைப் பார்ப்பதற்காக வந்தோம். அப்போது 2ம் எதிரி தன் தங்கையை அடித்ததில் முகத்தில் காயம் ஏற்பட்டதால் தன் தங்கையை மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்ற போது மருத்துவமனையில் காவல் நிலையத்தில் மெமோ வாங்கித்தருமாறு சொன்னார்கள். பீளமேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அப்போது விசாரணை செய்ததில் 1ம் எதிரி அ.சா.1 டம் சேர்ந்து வாழ்வதாகச் சொல்லிவிட்டார். ஆனால் அ.சா.1 ஐ எதிரி கூட்டிச்செல்லவில்லை. அதன்பிறகு கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(**iv**) அ.சா.4 நீலாதேவி தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 தன் சகோதரி 1ம் எதிரி அ.சா.1ன் கணவர். கடந்த 10.02.2019ம் தேதியன்று அ.சா.1 க்கும் 1ம் எதிரிக்கும் கோவையில் வைத்து திருமணம் நடந்தது. அ.சா.1 தனக்கு போன் செய்து வியாபரத்திற்கு நகை வேண்டுமென்று எதிரிகள் கேட்டதாகச் சொன்னார். அ.சா.1ம் 1ம் எதிரியும் தங்கள் வீட்டிற்கு விருந்திற்கு வந்த போது ஆளுக்கு 40 ஆயிரம் பணம் போட்டு ரூபாய் இரண்டு லட்சம் சேர்த்து அ.சா.1-டமும் 1ம் எதிரியிடமும் கொடுத்தோம். அதன் பிறகு 1ம் எதிரி அ.சா.1 ஐ அடித்ததால் அ.சா.1 தற்கொலை செய்யப்போவதாகச்சொன்னார். தாங்கள் சமாதானம் பேசலாம் என்று வந்தபோது எதிரிகள் தங்களை அசிங்கமா பேசினார்கள். தான் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டபோது 2ம் எதிரி தன் தங்கையின் முடியைப்பிடித்து இழுத்தும், முகத்தில் நகத்தால் கீறி காயம் ஏற்படுத்தி விட்டார். 3ம் எதிரி தாலிக்கொடியைப்பிடித்து இழுத்துவிட்டார். தனக்கு காயம் ஏற்பட்டுவிட்டதால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று மருத்துவமனை சென்ற போது காவல் நிலையத்திலிருந்து மெமோ வாங்கி வருமாறு சொன்னார்கள். பீளமேடு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எதிரிகள் 10 நாட்களில் அ.சா.1 ஐ அழைத்து செல்வதாக கூறிவிட்டு அழைத்துச்செல்லாததால் தாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சாட்சியம் அளித்துள்ளார்

(**V**) அ.சா.5 மணி தனது சாட்சியத்தில் தான் திண்டுக்கல் வடமதுரையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 தன் மனைவியின் தங்கையாவார். 1ம் எதிரி அ.சா.1ன்

கணவர். 10.02.2019 ம் தேதியன்று அ.சா.1 க்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது அ.சா.1 க்கு 30 பவுன் நகையும், வீட்டுக்குத்தேவையான பொருட்கள் ரூ.12,00,000/-ம் மதிப்புள்ள பொருட்களை சீதனமாகக்கொடுத்தோம். திருமணமான 1 ,2 மாதங்கள் கழித்து, தொழில் செய்வதற்காக நகை வேண்டும் என அ.சா.1 டம் 1 ம் எதிரி கேட்டபோது அ.சா.1 நகைகளை கொடுத்துள்ளார். நகை கொடுத்த பிறகு 1 ம் எதிரி பணம் வேண்டும் என்று கேட்டதால் ரூபாய் இரண்டு லட்சம் பணம் கொடுத்தோம். மேலும் எதிரிகள் அ.சா.1 டம் பணம் கேட்டு அ.சா.1 ஐ எதிரிகள் அடித்துள்ளார்கள். 2019 வது ஆண்டு தான் மற்றும் தனது குடும்பத்தினகள் அனைவரும் கோவைக்கு வந்து எதிரிகளின் வீட்டிற்கு சென்று எதிரிகளிடம் பேசிக்கொண்டிருந்த போதே அ.சா.1 ன் மாமியார் தனது கொழுந்தியாரை அடித்ததில் தனது கொழுந்தியாருக்கு காயம் ஏற்பட்டது. அதனால் பீளமேடு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அப்போது 1 ம் எதிரி அ.சா.1 ஐ 1 மாதம் கழித்து கூட்டிச்செல்வதாகச்சொல்லிவிட்டு கூட்டிச்செல்ல வரவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(**Vi**) அ.சா.6 சக்திவேல் தனது சாட்சியத்தில் தான் திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 தனது அக்காவின் மகள் உறவினர் ஆகும். 1 ம் எதிரி அ.சா.1 ன் கணவர் ஆவார். 10.2.2019 ம் தேதியன்று அ.சா.1 க்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. அ.சா.1 டம் 1 ம் எதிரி வீடு ஒத்திக்கு பிடிப்பதற்காக பணம் கேட்டார். அ.சா.1 ன் சகோதரிகள் சேர்ந்து பணம் ரூ.2,00,000/-த்தை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். திருமணத்தின் போது இரு சக்கர வாகனம், வீட்டு உபயோகப்பொருட்கள், பிரிட்ஜ் மற்றும் வாசிங் மெசின் கொடுத்தார்கள். 30 பவுன் நகை கொடுத்தார்கள். அதில் 15 பவுன் நகையை 1 ம் எதிரி வாங்கி அடமானம் வைத்துள்ளார். மேலும் 1 ம் எதிரி அ.சா.1 டம் பணம் கேட்டார். அ.சா.1 ன் சகோதரிகள் பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். 20 நாட்கள் அ.சா.1 ஐ அவரது பெற்றோர் வீட்டில் இருக்குமாறு சொல்லி அனுப்பி வைத்தார். 20 நாட்கள் முடிந்தும் 1 ம் எதிரி வந்து அ.சா.1 ஐ அழைத்துச்செல்லாததால் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சாட்சியமளித்துள்ளார்.

(**Vii**) அ.சா.7 கோபால்சாமி தனது சாட்சியத்தில் தான் கோவை மசக்காளி-பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான். தன் வீட்டின் முன்பு வைத்து வரைபடம் வரைந்தார்கள். அதில் தான் தான் சாட்சியாக கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(**Viii**) அ.சா.8 விஜயலட்சுமி தனது சாட்சியத்தில் தான் கோவை சவுரிபாளையம்-மசக்காளிபாளையம் சாலையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மேகலா தங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருந்து வந்த வகையில் தெரியும். 1 ம் எதிரியும் அங்கு தான் குடியிருந்து வந்தார். தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். தங்கள் வீட்டின் முன்பாக போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். தான் அந்த வரைபடத்தில் சாட்சியாக கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(**iX**) அ.சா.9 திருமதி.கேத்தரின்மேரி தனது சாட்சியத்தில் தான் தற்போது துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2019 ம் தேதி மேகலா என்பவர் நிலையம் ஆஜராகிக்கொடுத்த எழுத்துமூலமான புகாரினைப்பெற்று மேற்படி காவல் நிலையக்குற்ற எண்.16/2019 சட்டடப்பிரிவுகள் 323, 406, 498(ஏ), 506(1) இ.த.ச.வாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாரினை இணைத்து கனம் கூடுதல் மகளிர் நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கினை தனது மேல் விசாரணைக்காக சம்பவ இடம் சென்று 09.10.2019 ம் தேதி இரவு சுமார் 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோபாலசாமி, விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகள் மேகலா, அகிலா, சிவகாமி, நீலதேவி, மணி, சக்திவேல் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(**X**) அ.சா.10 திருமதி அமுதா (காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் தான் கடந்த 27.10.2019 ம் தேதி கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.16/2019 சட்டப்பிரிவுகள் 323, 406, 498(ஏ), 506(1) இதச வழக்கின் கோப்பினை உதவி ஆய்வாளர் முதல் கட்ட விசாரணை முடித்து தன்னிடம் ஒப்படைத்த கோப்பினைப்பெற்று சாட்சிகளை விசாரித்த போது சாட்சிகள் அனைவரும் உதவி ஆய்வாளர் அவர்களிடம் சொன்னதையே தன்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. 20.08.2019 ம் தேதி வழக்கின் புலன் விசாரணை முடித்து 1 முதல் 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 323, 406, 498(ஏ), 506(1) இதச பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி 12.05.2023 ம் தேதி வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினர்.

9. தீர்வுக்குரிய பிரச்சனை:

எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 323, 406, 498(**A**). 506(1)ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

தீர்வு

10. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது அரசு தரப்பு ஆவணங்கள் சாட்சிகள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டதாகவும் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டுமாயும் அரசு தரப்பு வாதத்தினை முன் வைத்துள்ளார். மாறாக எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது 1 ம் எதிரியும் அ.சா.1 ம் சமாதானம் பேசி 1 ம் எதிரி அ.சா.1 க்கு ரூ.3 லட்சம் பணம் தருவதாக கூறி தற்போது ரூ.2 லட்சம் பணமும், இருசக்கர வாகனம் (ஸ்கூட்டி), வாஷிங்மெஷின், கட்டில் மற்றும் தையல்மெஷின் போன்ற பொருட்களை

அ.சா.1, 1ம் எதிரிகளிடமிருந்து பெற்றுக்கொண்டதாகவும், மீதி ரூ.1 லட்சம் பணத்தை நான்கு மாதத்திற்குள் அ.சா.1க்கு, 1ம் எதிரி கொடுப்பதாக கூறியதாகவும், மேலும் அ.சா.1ம், 1ம் எதிரியும் சமரச மனு தாக்கல் செய்து விவாகரத்து பெற்றுக்கொள்வதாக முடிவு செய்து கொண்டதாகவும் வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் எதிரிகள் குற்றமற்றவர் என்றும், எதிரிகளை விடுதலை செய்யவேண்டு மென்றும் வாதத்தினை முன் வைத்துள்ளார்.

11. கடந்த 10.02.2019ம் தேதியன்று நிகழ்நிலை புகார்தாரருக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணத்திற்கு பிறகு எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரிடம் மேலும் நகை பணம் கொண்டுவந்தால் தான் இங்கே வாழவிடுவோம் என்றும், இல்லை என்றால் கொன்றுவிடுவதாக கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான மேகலா என்பவர் கோவை கிழக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களால் எதிரிகள் மீது காவல்நிலைய குற்ற எண்.16/2019 சட்டப்பிரிவுகள் 323, 406, 498(ஏ), 506(1)-வின் கீழான குற்றத்திற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு இ.த.ச பிரிவுகள் 323, 406, 498(ஏ), 506(1)-ன் கீழான குற்றத்திற்காக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இந்த வழக்கு கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

12. அரசுத்தரப்பு வழக்கினை நிரூபிக்கும் பொருட்டு அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப் பட்டுள்ளார்கள். அதுபோல அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான மேகலா என்பவர் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்க பட்டுள்ளார். அரசுத்தரப்பு வழக்கின் படி நிகழ்நிலை புகார்தாரர் தான் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் தனது சாட்சியத்தின் போது

அ.சா.1ன் திருமணத்தின் போது போடப்பட்ட 30 பவுன் நகைகளில் 15 பவுன் நகைகளையும் மற்றும் 2 லட்சம் பணத்தையும் எதிரிகள் வாங்கிக்கொண்டதாகவும் பின்னிட்டு மீண்டும் அ.சா.1டம் இருந்த நகைகளை கேட்டும் பணமாய் பெறவேண்டுமாய் கேட்டும் அடித்து துன்புறுத்தியதாக 13.07.2019ம் தேதியன்று எதிரிகள் அ.சா.1 ஐ அடித்து காயப்படுத்தியதாகவும் மறுநாள் எதிரிகள் வீட்டிற்கு வந்திருந்த அ.சா.1ன் சகோதரிகளில் ஒருவரான நீலாதேவி என்பவரை எதிரிகள் முகத்தில் அடித்து காயப்படுத்தியதாகவும் எனவே அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும், பீளமேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

14. குறிப்பாக அ.சா.1 தான் கொடுத்துள்ள புகாரான அ.சாஆ.1 ஆவணத்தில் தனது சகோதரிக்க காயம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ள போதிலும் எந்த சகோதரிக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றும் சகோதரியின் பெயரையும் குறிப்பிட்டு அ.சா.ஆ.1 புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தின் போலவே அ.சா.2 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளும் எதிரிகள் அடித்ததாகவும், அ.சா.1ன் சகோதரியான அ.சா.4 நீலாதேவி என்பவருக்கு காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு கூறி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

15. அதுபோல அ.சா.4 நீலாதேவி என்பவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை பெறுவதற்கு அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும் பின்னிட்டு பீளமேடு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளை விசாரித்ததில் 1 மாதத்தில் 1ம் எதிரி தனிக்குடித்தனம் வைத்து அ.சா.1 ஐ அழைத்துச்செல்வதாக உறுதி அளித்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளார். ஆனால் அ.சா. 4 நீலாதேவி என்பவருக்கு காயம் ஏற்பட்டதை காண்பிக்கவோ அதுபோல அ.சா.1 மேகலா என்பவருக்கு எதிரிகள் தாக்கியதால் காயம் ஏற்பட்டதை காண்பிக்க எந்த ஒரு மருத்துவ ஆவணங்களும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அதுபோல 14.07.2019ம் தேதியில் எதிரிகள் அ.சா.1ஐ தாக்கியது தொடர்பாகவும் பீளமேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்யப்பட்டதாக அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள போதிலும் அது சம்மந்தமாக எந்த ஒரு ஆவணங்களும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

16. குறிப்பாக வழக்கின் புலன் விசாரணை சமயத்தில் கூட அ.சா.1 புகாரில் சொல்லியுள்ளது போல பீளமேடு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மற்றும் அதுதொடர்பான ஆவணங்களை கைப்பற்றவோ பீளமேடு காவல் நிலையத்தில் புகாரின் பேரில் விசாரணை செய்த அதிகாரியை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவோ இல்லை.

17. எனவே 14.07.2019 ம் தேதியன்று ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக புகார் கொடுக்கப்பட்டது என்பதை காண்பிக்க அரசு தரப்பில் எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுபோல நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது முதல் விசாரணையில் தனக்கு திருமணத்தின் போது 30 பவுன் போடப்பட்டுள்ள-தாகவும், அதில் 15 பவுன் நகைகளை எதிரிகள் வாங்கி விற்பனை செய்து-விட்டதாகவும், அதுபோல அ.சா.1 டமிருந்து ரொக்கமாக ரூ.2 லட்சத்தை எதிரிகள் பெற்றுக்கொண்டதாகவும் குறிப்பிடடு சொல்லியுள்ள போதிலும் என்னென்ன நகைகளை எதிரிகள் வாங்கியுள்ளார்கள் என்பதை பற்றியோ, நகைகளை எந்த தேதியில் எங்கு விற்பனை செய்துள்ளார் என்பதை பற்றியோ, எந்த தேதியில் ரூ.2 லட்சம் பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு எந்த ஒரு சங்கதிகளும் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை.

18. அதுபோல எதிரிகள் அ.சா.1 டமிருந்து நகைகள் மற்றும் ரொக்க பணத்தை பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை காண்பிக்க எந்த ஒரு ஆவணங்களும் அரசு தரப்பில் நீதிமன்றத்திற்கு முன்பாக பார்வைக்கு சமர்பிக்கப்படவில்லை. அ.சா.1 சகோதரிகள் மற்றும் சகோதரிகளின் கணவர் ஆகியோர் வழக்கு சங்கதிகள் தொடர்பாக சாட்சியம் அளித்துள்ள போதிலும் நகைகள் மற்றும் பணம் தொடர்பாக தேதி மற்றும் விபரங்கள் குறித்து தெளிவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.6 சக்திவேல் என்பவரும் தனது விசாரணையில் அ.சா.1 தான் அவரது நகைகளை எதிரிகள் அடமானம் வைத்துள்ளதாக குறிப்பிட்டு கூறியதாகவும் தனக்கு நேரில் தெரியாது எனவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துய்ள்ளார். ஆகவே அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சியங்களின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க போதுமான சாட்சியாக அமையவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. அதுபோல அ.சா.1ன் திருமணத்தின் போது அ.சா.1ற்கு ஸ்கூட்டி இருச்சக்கர வாகனம் மற்றும் இதர சீர்வரிசை பொருட்கள் சீதனமாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள போதிலும் அது சம்மந்தமாக பில்களோ, ரசீதுகளோ எந்த ஒரு ஆவணங்களும் அரசு தரப்பில் ஆவணங்களாக சமர்பிக்கப்-படவில்லை. குறிப்பாக அ.சா.1ன் திருமணத்தின் போது அ.சா.1ற்கு ஸ்கூட்டி இருச்சக்கர வாகனம் சீதனமாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அ.சா.1 மற்றும் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தின் போது சீதனமாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் இருச்சக்கர வாகனம் 2016ம் ஆண்டே விலைக்கு வாங்கப்பட்டதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். அந்த இருச்சக்கர வாகனத்தின் பதிவு எண்ணோ, வாகனத்தின் பதிவு சான்றிதழ் தொடர்பான ஆவணங்களோ இந்நீதிமன்றத்தில் ஆவணமாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

20. வழக்கின் முதல் புலன் விசாரணை அதிகாரியான திருமதி.கேத்தரின் மேரி காவல் உதவி ஆய்வாளர் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் அவர் தனது சாட்சியத்தின் போது சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 சாட்சிகள் முன்பாக பார்வை மஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளார். அந்த பார்வை மகஜர் மற்றும மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதுபோல பார்வை மகஜரில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள நபர்களான கோபால்சாமி மற்றும் விஜயலட்சுமி ஆகியோர் அரசு தரப்பில் முறையே அ.சா.7 மற்றம் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது சாட்சியத்தின் போது வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 சம்பவ இடம் சென்று புலன் விசாரணை செய்ததையும் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்ததையும் அந்த ஆவணத்தில் சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளார் என்பதையும் உறுதிபடுத்தி சாட்சியம் அளித்துள்ள போதிலும் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிருபிப்பதற்கு அ.சா.7 மற்றும் அ.சா.8 சாட்சிகளின் சாட்சியம் போதுமானதாக இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.4 ஆகியோரை காயப்படுத்தியதாகவும், அ.சா.1 டமிருந்து நகைகள் மற்றும் பணத்தை பெற்றுக்கொண்டதாகவும் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிருபிப்பதற்கு அரசு தரப்பில் தகுந்த சான்றாவணங்கள் எதையும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில் அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமாய் மனு தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவின் பெயரில் அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. அப்போது அ.சா.1 ஆனவர் தனது குறுக்கு விசாரணையில் அ.சா.1 ம் எதிரிகளும் சமாதானம் செய்து கொண்டதாகவும், எதிரிகள் ரூ.3 லட்சம் பணம் கொடுப்பதாக பேசி முடிக்கப்பட்டு ரூ.2 லட்சம் தொகையினை எதிரிகளிடமிருந்து அ.சா.1 பெற்றுக்கொண்டதாகவும், அதுபோல அ.சா.1 ன் பொருட்களை எதிரிகளிடமிருந்து திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், இந்த வழக்கினை மேல் நடத்தவில்லை எனவும் எதிரிகளை விடுதலை செய்வதில் ஆட்சேபனை இல்லை எனவும் குறிப்பிட்டு கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

22. அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் வழக்கு சங்கதிகள் தொடர்பாக வாய்மொழியாக சாட்சியம் அளித்துள்ள போதிலும் எதிரிகள் நகைகள் மற்றும் பணத்தை பெற்றுக்கொண்டதை காண்பிக்கவும் அ.சா.1 மற்றும் அ.சா.4 ற்கு காயம் ஏற்பட்டது என்பதை காண்பிக்கவும் அரசு தரப்பில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யப்படவில்லை.

23. எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்க வாய்மொழிசாட்சிகள் தவிர வேற ஆவண சாட்சிகள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எனவே அரசு தரப்பு சாட்சியங்கள் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு வலுச்சேர்ப்பதாக அமையவில்லை எனவும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதுபோல எதிரிகளிடம் பணம் கொடுக்கப்பட்டது குறித்தும், சீர்வரிசை பொருட்கள் குறித்தும் அரசு தரப்பு சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாகவும் மாறுபட்டும் சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பு வழக்கை வலுவிழக்கச்செய்வதாகவும் உள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

24. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்து எதிரிகளை விடுதலை செய்வதே நீதியின் பால் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இறுதியாக இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

25. முடிவில், 1 முதல் 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 323, 406, 498(ஏ), 506(1) இ.த.சவின் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால் அவர்களை குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

26. வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, அதனால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்தாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11ம் நாள் செவ்வாய் கிழமை அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/-ஏ.அப்துல்ரகுமான்,
நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

அட்டவணை :
அரசு தரப்பு சாட்சிகள் :

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|
| அ.சா.1 | மேகலா | **20.12.2022** | **04.03.2025** |
| அ.சா.2 | சிவகாமி | **20.12.2022** | **-** |
| அ.சா.3 | அகிலா | **20.12.2022** | **-** |
| அ.சா.4 | நீலாதேவி | **20.12.2022** | **-** |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.5 | மணி | **20.01.2023** | **-** |
| அ.சா.6 | சத்திவேல் | **20.01.2023** | **-** |
| அ.சா.7 | கோபால்சாமி | **20.01.2023** | **-** |
| அ.சா.8 | விஜயலட்சுமி | **20.01.2023** | **-** |
| அ.சா.9 | திருமதி.கேத்தரின்மேரி (உதவி ஆய்வாளர்) | **27.02.2023** | **03.08.2023** |
| அ.சா.10 | திருமதி.அமுதா (காவல் ஆய்வாளர்) | **03.05.2023** | **14.08.2023** |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>

அ.சா.ஆ.1 - புகார்.
அ.சா.ஆ.2 - பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து.
அ.சா.ஆ.3 - பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து.
அ.சா.ஆ.4 - முதல் தகவல் அறிக்கை.
அ.சா.ஆ.5 - பார்வை மகஜர்.
அ.சா.ஆ.6 - மாதிரி வரைபடம் .

அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை
எதிரிகள் தரப்பு சாட்சிகள் : இல்லை
எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

<u>பின்குறிப்பு :</u>

1. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்து வருகிறார்கள்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு அறிக்கை காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. எதிரிகளை விடுதலை செய்யப்பட்டார்.
5. வழக்குச்சொத்து பற்றிய உத்தரவு சொத்து பதிவேட்டில் பதியப்பட்டது.

ஒம்/-ஏ.அப்துல்ரகுமான்,
நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் (பொறுப்பு),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.